# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ**

*************

**முறையீட்டு மனு எண்: 858/2016பே–2**
**ஆணை எண். 96 /2018, நாள்: 09–04–2018**

**திரு H. ராஜேஷ்,**
**110/101, , 2வது தளம்,**
**கோல்டன் டவர், மேல வீதி,**
**திருக்கோவிலூர்,**
**விழுப்புரம் மாவட்டம்.** — — **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**திருகோவிலூர் பேரூராட்சி,**
**திருக்கோவிலூர்,**
**விழுப்புரம் மாவட்டம்.** — — — **எதிர் மனுதாரர்.**

**ஆணை**

திரு H. ராஜேஷ், த/பெ திரு ஹரிகிருஷ்ணன், எண்.110/101, 2வது தளம், கோல்டன் டவர், மேல வீதி, திருக்கோவிலூர் என்பவரது 19.08.2016ம் நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.08.2016ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 858/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

திரு H. ராஜேஷ், முறையீட்டு மனுதாரர், தனது புகார் மனுவில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சி நிர்வாகத்தின் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

1. திருக்கோவிலூர் பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபங்கள் கடைகள், வணிக வளாகங்கள், வங்கிகள் மற்றும் உணவகங்கள் அனைத்தும் பேரூராட்சியில் பெற்ற கட்டிட வரைபட அனுமதியினை மாற்றியும் அல்லது முறையற்ற அனுமதி பெற்றும் எவ்விதமான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தாமல் கட்டப்பட்டுள்ளன.

2. மேற்படி கட்டிடங்கள் பெற்ற அனுமதியினை மீறி கட்டப்பட்டுள்ளதாலும் எவ்வித அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தாததாலும், வாகனங்கள் வீதிகளில் நிறுத்தப்படுவதாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. மேற்படி போக்குவரத்து நெரிசலுக்கு பேரூராட்சி நிர்வாகம் கட்டிட வரைபட அனுமதியினை முறையாக வழங்காததும், கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை ஆய்வு மேற்கொண்டு முறையற்ற கட்டிடங்களை வரன்முறைப்படுத்தாததுமாகும்.
4. மேலும் 2000 சதுர அடி கட்டிடத்திற்கு அனுமதி பெற்று 6000 சதுர அடிக்கு இரண்டு அல்லது மூன்ற மாடிகள் கட்டப்பட்டும், இவற்றினை முறைப்படுத்த முறைப்படி நகர் ஊரமைப்புத்துறைக்கு அனுமதி வேண்டி விண்ணப்பிக்காமல் பேரூராட்சி நிர்வாகமே முறைகேடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 23.08.2016ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரர், தனது முறையீடு குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் 23.09.2016 அன்று நேரில் ஆஜராகி தனது விளக்கத்தினை பதிவு செய்ய ஆணையிடப்பட்டது.

திரு H. ராஜேஷ் இம்முறைமன்ற நடுவத்தில் 23.09.2016 அன்று நேரில் ஆஜராகி தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........கடந்த 19.08.2016ம் நாளிட்ட புகார் மனு தன்னால் அளிக்கப்பட்டது எனவும், திருக்கோவிலூர் பேரூராட்சியில் கட்டப்பட்டு வரும் மற்றும் ஏற்கனவே அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடங்கள் அனைத்தும் வழங்கப்பட்ட அனுமதியினை விட அதிகமாகவும் விதி மீறியும் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். திருக்கோவிலூர் பேரூராட்சியினை சுற்றி சுமார் 100 கிராமங்கள் உள்ளதாகவும், இப்பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள/கட்டப்படும் கட்டிடங்கள் வாகனங்கள் வருவதற்கு எந்தவிதமான வழிவகையும் செய்யாத நிலையில் உள்ளதாகவும் இக்கட்டிடங்களில் இயங்கும் துணிக்கடை போன்றவற்றில் தீடீரென ஏற்படும் விபத்துக்களில் அவசர கால வழிகள் இல்லாமல் பொதுமக்கள் தப்பிக்கக்கூட வழி இல்லாத ஒரு ஆபத்தான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தான் பேரூராட்சி நிர்வாகம் மற்றும் உயர் அலுவலர்களுக்கு மனுக்கள் அனுப்பியும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் உள்ளதாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவரம் கோரியும் எந்தவித தகவலும் அளிக்கவில்லை எனவும் தனது விளக்கத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். இவ்வாறு கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கையூட்டு பெற்றுக் கொண்டு கண்டும் காணமலும், இது போன்ற கட்டிடங்கள் கட்டுவதை தடுக்காமலும் ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு துணை போகிறார்கள் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். பேரூராட்சி அதிகார வரம்பிற்குள் அனுமதி வாங்கிவிட்டு அனுமதி வாங்கிய வரைபடத்திற்கு மாறாக கட்டிடங்கள் கட்டுவது தொடர்ந்து வருகிறது எனவும், உதாரணமாக 2000 சதுர அடிக்கு அனுமதி பெற்று 3 தளங்கள் கொண்ட 6000 சதுர அடியில் கட்டிடம் கட்டுவதாகவும், இதற்கு நகர் ஊரமைப்புத்துறையின் அனுமதி பெறாமல் உள்ளூர் அரசியல் வாதிகள் துணைகொண்டு வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டப்பட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் திருக்கோவிலூர் பேரூராட்சியானது புராதான கோயில் நகரமாக அரசால் அறிவிக்கப்பட்டு பல்வேறு வளர்சசிப் பணிகளுக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டும் எந்த நிதியும் முறையாக பயன்படுத்தி வளர்ச்சிப் பாதையில் கொண்டுபோகாமல் பேரூராட்சி அதிகாரிகள் நகரை போக்குவரத்து நெரிசல் மிக்க நகரமாக மாற்றி சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தியுள்ளதாகவும், திருக்கோவிலூர் நகரில் உள்ள

உலகளந்த பெருமாள் கோவிலுக்கு பொதுமக்கள்,.பக்தர்கள் சுகாதாரமாக சென்று வர முடியாமல் கடைகளால் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் இது குறித்து குறிப்பாக 10 இடங்களை குறிப்பிட்டு ஒரு வாரத்தில் விவரம் தெரிவிப்பதாகவும் தனது விளக்கத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் 12.09.2016ல் ஒரு மனு அனுப்பியுள்ளதாகவும், அதில் பஸ் நிலையம் கட்டியதில் அனுமதி பெறாமல் கடந்த 16.07.2015ம் தேதியிட்டு பணிகள் ஆரம்பித்து அதில் ரூ.60.00 லட்சம் வரை அனுமதி பெறுவதற்கு முன்பே பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், விதிகளுக்கு மாறாக கூடுதல் கடைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் இது குறித்து புகார் கொடுத்தும் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 27.09.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 650/2016/நாள். 14.10.2016ன் மூலம் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே மிகவும் பழமையான நகரமாக இருந்து வருவதாகவும், திருக்கோவிலூர் பேரூராட்சி நிர்வாகம் வருவதற்கு முன்பே அனைத்து குடியிருப்பு மற்றும் தெரு பகுதிகளிலும் கிராம நத்தமாக இருந்து வந்து பட்டா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஆரம்ப நிலையிலேயே குறுகிய தெருக்களாகவே இருந்து வந்துள்ளதாகவும், நகரம் குடியிருப்பு பகுதியாக இருந்த நிலையில் இடையூறு என்ற புகார் இல்லாமல் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சி பகுதி விரிவடைய முடியாத நிலையில் இருந்து வருவதால் காலத்திற்கேற்ப அப்பகுதியே குடியிருப்பு மற்றும் வணிக வளாகமாக மாறி வருவதாகவும், ஆனால் அனைத்து குடியிருப்பு பகுதிகளும் ரீ சர்வே 238/1A1A1A1ன்மூலம் கிராம நத்தம் பட்டா பெற்று, பட்டாவில் உள்ள அளவில் வீடுகளும் வணிக நிறுவனங்களும் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கட்டி உள்ளதாகவும், புதிய கட்டிடங்கள், திருமண மண்டபங்கள், மற்றும் பல்வேறு வணிக நிறுவனங்கள் அனைத்தும் கட்டிட அனுமதி கோரும்போதே கட்டிடத்தினை வரைபடத்தினையும், மேற்படி சம்பந்தப்பட்ட புல எண்ணில் உள்ள இடத்தினையும் ஆய்வு செய்யப்பட்டு கட்டிட விதிமுறைகளுக்கு உட்பட்டே கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ளவாறு எந்தவிதமான கட்டிடங்களுக்கும் பேரூராட்சி விதிமுறைக்கு புறம்பாக அனுமதி வழங்குவதில்லை எனவும், நகரின் பிரதான சாலைகள் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதர சாலைகள் பேரூராட்சியின் சாலைகள் எனவும், இரு துறைகளின் சாலைகளும் மிகவும் பழமையான காலத்தே சம்பந்தப்பட்ட குறுகிய சாலைகள் எனவும் இதன் மூலம் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதை தடுக்க அவ்வப்போது பேரூராட்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, வருவாய்த்துறை மற்றும் காவல் துறை ஆகிய துறைகள் ஒன்றிணைந்து ஆக்கிரமிப்புகள்

அகற்றப்பட்டு வருவதாகவும் இந்நிலையில் தற்போது வணிக நிறுவனங்கள் இடம் பெற்றுள்ள சாலைகள் அனைத்தும் வடிகால் மற்றும் நடைபாதை வசதி அமைக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தெரிவித்துள்ளவாறு வணிக வாளகத்திற்கு கட்டிட அனுமதி வழங்குவதெனில் 2000 சதுர அடிக்கு உட்பட்டு வணிக பகுதிகளுக்கும், 4000 சதுர அடிக்கு உட்பட்டு குடியிருப்பு பகுதிகளுக்கும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும், மேற்படி அளவுகளுக்கு மேல் கட்டிட அனுமதி நகர ஊரமைப்புத்துறை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் தெரிவித்துள்ளவாறு எந்த ஒரு தவறான நடவடிக்கையும் கட்டிட உரிமம் வழங்குவதில் பின்பற்றப்படுவதில்லை எனவும், எதிர் வரும் காலத்திலும் இந்த நிலையில் எந்த ஒரு விதி முறை மீறலும் நடைபெறாவண்ணம் கட்டிட அனுமதி வழங்கப்படும் எனவும் தனது அறிக்கையில் திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.11.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் மீதான குறிப்பினை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திரு H.ராஜேஷ், தனது 28.11.2016ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைக்கு தனது பதிலை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையினை எந்த புலத்தணிக்கை மற்றும் விசாரணை செய்யாமலும், மனுதாரரான தனது கருத்தினை கேட்காமலும் அறிக்கை அனுப்பியுள்ளதாகவும், மேற்படி பேரூராட்சியில் தான் ஏற்கனவே தனது மனுவில் தெரிவித்துள்ளவாறு அனுமதி பெறப்பட்ட கட்டிடங்கள் யாவும் அனுமதியினை மீறியும், உரிய அடிப்படை வசதிகள் இன்றியும் கட்டப்பட்டுள்ளதாகவும், தற்சமயம் கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு கூட மேற்படி வசதிகள் இல்லாமல் அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தள்ளார்.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இப்பேரூராட்சியில் உள்ள தெருக்கள் யாவும் ஏற்கனவே குறுகலான தெருக்களாக உள்ளதாகவும் இதனால் கட்டிடங்கள் கட்டப்படும்போது உரிய ஆய்வு மேற்கொண்டு அனுமதி வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளமைக்கு ஏற்கனவே உள்ள கட்டிடங்கள் விரிவாக்கம் செய்யப்படும்போதும், புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்படும்போதும் வாகன நிறுத்தம் மற்றும் அவசர கால வெளியேறும் வசதி ஆகயவற்றினை உறுதிப்படுத்தி அனுமதி வழங்காமல் கோரப்படும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும் இது நகருக்கு ஆபத்தும் பொதுமக்களுக்கு இடையூறினையும் ஏற்படுத்தும் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே திருக்கோவிலூர் பேரூராட்சியில் அமைந்துள்ள அனைத்து கட்டிடங்களும் வாகனம் நிறுத்தும் வசதி மற்றும் அவசரகால வெளியேறும் பாதை ஆகியவை இல்லாமலும் கட்டிடத்தினை அனுமதி பெற்ற வரைபடத்திற்கு புறம்பாக கட்டிடத்தினை நீட்டியும், சட்ட விதிமுறைகளை மீறியும் கட்டப்பட்டுள்தாகவும், புதிய பேருந்து நிலைய கட்டிடத்தில் முறைகேடும் விதி மீறல்களும் நடைபெற்றது உண்மை எனவும் தெரிவித்து மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் கொடுத்துள்ள அறிக்கை ஒருதலை பட்சமானது எனவும்அதனை நிராகரிக்கக் கோரியும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 22.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் கூடுதல் வாதுரை நகலினை திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இது சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவத்தில் 09.11.2017ல் நேரில் மேற்படி வாதுரைக்கான கூடுதல் விளக்கங்களுடன் ஆஜராகி விளக்கம் அளிக்க ஆணையிடப்பட்டது.

திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.10.2017ம் நாளிட்ட அறிக்கையில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் கூடுதல் வாதுரைக்கான விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி தென்பெண்ணை ஆறும், மறு பகுதியில் பெரிய ஏரி, சித்தேரி ஆகிய இரண்டிற்குமிடையே அமையப்பெற்ற நகரம் எனவும் இந்நகரம் வணிக வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகரில் புதியதாக கட்டிட உரிமம் வழங்கப்படும் இடங்களுக்கு விதிமுறைகளுக்குட்பட்டே வழங்கப்படுவதாகவும், மேலும் தற்போது புதியதாக எந்த ஒரு திருமண மண்டபத்திற்கும் உரிமம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் பேரூராட்சியால் கட்டிட உரிமம் வழங்கப்பட்ட இனங்களில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் கண்டறியப்பட்டு விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நகரில் உள்ள வணிக பயன்பாடு கட்டிடங்கள் அனைத்தும் காவல்துறை, தீயணைப்புத்துறை ஆகியவைகள் பொதுமக்களின் பாதுகாப்பு போதிய அளவில் உள்ளதா என்பது கண்டறியப்பட்டு ஆய்வு செய்வதாகவும் , கட்டிட உரிமம் வழங்கப்பட்டுள்ள அளவினை விட அதிக அளவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் விதி மீறல்கள் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய பேருந்து நிலையம் விஸ்தரிப்பு சம்பந்தமாக மனுதாரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட W.P.16110/2017 வழக்கிற்கு 27.06.2017ல் தீர்ப்பின்படி மாவட்ட ஆட்சியரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட நபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மேற்படி கடித நகலும் இணைத்து சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் மேற்படி விசாரணை போதுமானதாக இல்லை என தெரிவித்து சென்னை உயர் நீதி மன்றத்தில் W.P.No.24671/2017 ல் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது எனவும் திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 09.11.2017 அன்று நேரில் ஆஜராகி மனுதாரரின் கூடுதல் வாதுரை குறித்தும் தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் 04.11.2016 முதல் திருக்கோவிலூர் பேரூராட்சியின் செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், அரங்கண்டநல்லூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றுவதாக தெரிவித்துள்ளார். திரு ராஜேஷ் என்பவரின் புகார் மனு குறித்த விவரம் தெரியும் எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் விதி மீறிய கட்டிடங்கள் ஏதும் இல்லை , விதிகளை மீறி பேரூராட்சி அனுமதியும் தரவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தன்னால் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், 20.10.2017ல் மாவட்ட ஆட்சியர் நிர்வாக நக,எண் 2137/2016/நாள் 11.08.2017ன்படி மனுதாரருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும்

தெரிவித்துள்ளார். திருக்கோவிலூர் மிகப் பெரிய ஊரக இருப்பதாலும், ஊரை சுற்றி நிறைய கிராமங்கள் இருப்பதாலும் அந்த கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தொழில் அடிப்படையிலும், பொருள்கள் வாங்குவதற்காகவும், அருகில் உள்ள திருக்கோவிலூார் நகருக்கு வருவதாகவும், அவர்கள் பயணிக்கும் சைக்கிள் மற்றும் வாகனங்களை தாங்கள் அடிக்கடி அப்புறப்படுத்தினாலும் அவர்கள் வேறு வழியின்றி நிறுத்தி வருவதாகவும், மிகவும் கண்டிப்பாக இருந்தால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுவதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். எனவே சட்டம் ஒழுங்கை பேணக்கூடிய வகையில் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் காவல் துறை மூலம் இந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவசிய அன்றாட தேவைக்காக பொது மக்கள் பயணிப்பதால் போக்குவரத்து நெருக்கடி பாதிப்புகள் வாகன நெரிசலால் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். முழுமையாக பொதுமக்களுடைய வாகனங்களை அப்புறப்படுத்துவது நடைமுறையில் சாத்தியம் இல்லாத நிலையாக உள்ளதாகவும், மனுதாரர் புதிய பேருந்து நிலையம் தொடர்பாக நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் சுய லாபத்திற்காக தொடர்ந்து இது போன்று புகார் மனுக்களை அனுப்பி வருகிறார் எனவும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களால் ஆணையிட்டவாறு மனுதாரரால் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பான வாதுரை எதிர் வாதுரை மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளின் நகல்களை பெற்று விரைவில் அனுப்பிவைப்பதாக திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திருக்கோவிலூார் பேரூராட்சி செயல் அலுவலர் தனத கடித ந.க.எண். அ.1/650/2016/நாள் 20.01.2018ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமா்ப்பித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சியில் திரு H. ராஜேஷ் என்பவரால் விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள், ஆக்கிரமிப்புகள் மற்றும் பேருந்து நிலையம் முறைகேடு தொடர்பாக தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனு எண் 858/2016/பேரூ.2 க்கான 09.11.2017ம் நாளைய விசாரணையின்போது உறுதி அளித்தவாறு விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டமைக்கு திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.650/2016/நாள் 06.01.2017ன் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையம் முறைகேடு தொடர்பாக திரு H. ரஜேஷ் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.No.16110 க்கு 27.06.2017ல் அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட நபருக்கு உரிய விவரம் தெரிவிக்க உத்திரவிடப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை கடிதம் சம்பந்தப்பட்ட நபருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண். 2137/2016/பேரூ.3/நாள் 11.08.2017ல் அனுப்பிவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கை போதுமானதாக இல்லை என தெரிவித்து சம்பந்தப்பட்ட நபர் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No. 24671/2017 வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கு 30.10.2017ல் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து

மேற்படி தீர்ப்பின் நகலினையும் இணைத்து திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட புகார்கள் குறித்து நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் எந்த ஒரு குறிப்பிட்ட கட்டிட விவரத்தினையும் குறைபாடாக தெரிவிக்கவில்லை. இருப்பினும் திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரது 20.01.2018ம் நாளிட்ட அறிக்கையில் பேரூராட்சியில் கட்டிட உரிமம் வழங்கப்பட்ட அளவினை விட விதி மீறி கட்டப்படும் கட்டிடங்கள் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் புதிய பேருந்து நிலையம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடந்த வழக்கு குறித்து வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் மேற்படி அறிக்கை திருப்திகரமாக இல்லை என மீளவும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டதை இம்முறைமன்ற நடுவம் பரிசீலித்தது. எனவே திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ள உறுதியின்படி பேரூராட்சி பகுதியில் விதி மீறி கட்டப்பட்டும் கட்டிடங்களை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், புகார்களுக்கு இடமின்றி உரிய விதிமுறைகளின்படி கட்டிட அனுமதியினை வழங்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**-//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//-**

செயலாளர்.

பெறுநர்

1.திரு H. ராஜேஷ்,
110/101, 2வது தளம்,
கோல்டன் டவர், மேல வீதி,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
திருக்கோவிலூர் பேரூராட்சி,
திருக்கோவிலூர் – 605 757
விழுப்புரம் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர் – 607 001.

4.மாவட்ட ஆட்சித் தலைவர்,
விழுப்புரம் மாவட்டம்.யீ